செய்தி வெளியீடு எண்: 246 நாள்: 11.04.2018

## <u>செய்தி வெளியீடு</u>

15வது நிதிக்குழுவின் ஆய்வு வரம்பின் மீது தமிழ்நாட்டின் கருத்துக்களை வடிவமைப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள் தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறை அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டம் 10.04.2018 அன்று நடைப்பெற்றது.

தமிழ்நாட்டில் மக்கட்தொகை கட்டுப்பாட்டு திட்டங்கள் கடந்த 40 ஆண்டுகளாக சிறப்பாக செயல்படுத்திய காரணத்தினால், 15வது நிதிக்குழுவின் ஆய்வு வரம்புகளில் 1971ஆம் ஆண்டைய மக்கள் தொகைக்குப் பதிலாக, 2011 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பினைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்ற முடிவு தமிழ்நாட்டிற்கு பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என்று கருதப்பட்டது.

இது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமருக்கும், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சருக்கும், நிதி ஆணையத்திற்கும் கடிதம் எழுதியுள்ளார். இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15வது நிதி ஆணையத்தினை நேரில் சந்தித்து, 15வது நிதிக்குழுவின் ஆய்வு வரம்பிலுள்ள தமிழ்நாட்டிற்கு பாதகமான

அம்சங்களை சுட்டிக்காட்டி அதனை திருத்திட கோரிக்கை மனுவினை அளித்து, நிதி ஆணையத்திடம் வலியுறுத்த முடிவு செய்யப்பட்டது,

மேலும், இதுகுறித்து பாராளுமன்ற விவாதத்தின்போது தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. இது தவிர, மத்திய நிதி ஆணையம் தமிழ்நாட்டிற்கு இது குறித்து விவாதிக்க வரும்போது, தமிழ்நாட்டின் நிலைப்பாட்டினை மிக உறுதியாக எடுத்துரைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.4.2018**